9-35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

தாய்சேய் நல விடுதி.

*8332 **திரு. ஆ. அறிவழகன் :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி கிராமத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் தாய்சேய் நல விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிந்தலவாடி கிராமம் வீடு கட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புனவாசிப்பட்டி கிராமம் மத்திப்பட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே சிந்தலவாடி மற்றும் புனவாசிப்பட்டி கிராமங்களில் தனியாக துணை சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்புகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சித்த மருத்துவப் பண்ணைகள் அமைத்தல்

* 8889 **திரு. எம். அண்ணாமலை :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் சித்த மருத்துவப் பண்ணைகள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் தீர்த்தமலையில் சித்த மருத்துவச் செடிகள் இருப்பதை அறிந்து பாண்டிச்சேரியை சேர்ந்த சித்த மருத்துவர்கள் வந்து கடந்த 10 ஆண்டுகளாகவே சேகரித்து செல்கிறார்கள். இதைப் பயன்படுத்தி அங்கு ஒரு சித்த மருத்துவ மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலையில் தற்போது ஆங்காங்கு இருக்கின்ற சுகாதார நிலையங்களின் பக்கத்தில் இருக்கின்ற வளாகங்களில் அவைகள் பயிரிடப்பட்டு அவைகளைச் சேகரித்து மற்ற இடங்களுக்குத் தந்து அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. தேவைப்படுமானால் இந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், இந்த சித்த மூலிகைக்கு நிலஆவரைச் செடி என்று ஒரு செடி தமிழ்நாட்டிலேயே அந்தப் பகுதியிலே தான், அதாவது அந்தத் தீர்த்தமலைப் பகுதியிலேயும், தர்மபுரி மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவற்றையும், மேலும் பல்வேறு சித்த மூலிகைச் செடிகளையும் ஊராட்சி ஒன்றிய அளவிலே உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபுணர்கள் மூலம் கேட்டறிந்து அதற்காகப் பரிசீலனை செய்யலாம்.

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுதல்.

*5607 திரு. ராம. நாராயணன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுவது சம்பந்தமாக சாக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவரிடமிருந்து கடிதம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?